

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.11.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாட்டின் வடபகுதியிலுள்ள நகரங்களுக்கும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினை கொண்டு செல்லும் நோக்கத்துடன் திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் 330 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் 21 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள மாபெரும் டைடல் பூங்காவை திறந்து வைத்தார். இவ்விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன், துரை சந்திரசேகர், எஸ்.சந்திரன், வி.ஜி.ராஜேந்திரன், அ.கிருஷ்ணசாமி, கே.கணபதி, ஜோசப் சாமுவேல், எஸ். சுதர்சனம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த. பிரபுசங்கர், ஆவடி மாநகராட்சி ஆணையர் எஸ். கந்தசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.11.2024) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு முழுவதும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் தென்னிந்தியாவிலேயே முதன்முறையாக காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் துல்லிய உற்பத்தி பெருங்குழுமத்தால் முதற்கட்டமாக 18.18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தை திறந்து வைத்தார். இவ்விழாவில், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கு. செல்வப்பெருந்தகை, எஸ்.ஆர். ராஜா, இ.கருணாநிதி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் அதுல் ஆனந்த், சிட்கோ முதன்மைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆ. கார்த்திக், மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் பெரிய தொழில்கள் வளர்ந்து வருகிறது - கணினியியலில் மேலும் மேலும் முன்னேற்றம் கண்டு வருகிறது - சிறு தொழில்கள் தொடர்ந்து வளர்ந்து வருகிறது!

# பட்டாபிராமில் மிகப்பெரிய ‘டைடல்’ பூங்கா!

# திருமுடிவாக்கத்தில் துல்லிய பொறியியல் - தொழில்நுட்ப மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

### திராவிட மாடலின் பார்வையை பிரதிபலிக்கும்

### பட்டாபிராம் ‘டைடல்’ பூங்கா!

**முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பெருமிதம்!**



சென்னை, நவ. 24-

பட்டாபிராம் ‘டைடல்’ பூங்கா குறித்து சமூக வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது-

2000 ஆம் ஆண்டில், சென்னையில் முதல் TIDEL பூங்காவைத் திறந்து வைத்து தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்கு அடித்தளம் அமைத்தவர் தலைவர் கலைஞர்.

இன்று, ஆவடியில் (பட்டாபிராம்) 21 மாடிகளைக் கொண்ட TIDEL பூங்காவை நான் பெருமையுடன் திறந்து வைத்தேன், 6,000 தொழில் வல்லுநர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கி, வடக்குப் பகுதிகளில் வளர்ச்சியை உயர்த்தினேன்.

இந்த சின்னமான அமைப்பு, அடுக்குII மற்றும் அடுக்குIII நகரங்களில் உள்ள பல நியோ டைடல் பூங்காக்களுடன், நமது மாநிலத்திற்கான உள்ளடக்கிய மற்றும் சமமான வளர்ச்சிக்கான #DravidianModel இன் பார்வையை பிரதிபலிக்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை, நவ.24-

**திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் ரூ.330 கோடி செலவில் மிகப்பெரிய டைடல் பூங்காவையும், காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கத்தில் முதற்கட்டமாக ரூ.18.18 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.11.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாட்டின் வடபகுதியிலுள்ள நகரங்களுக்கும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினை கொண்டுசெல்லும் நோக்கத்துடன் திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் 330 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் 21 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள மாபெரும் ‘டைடல்’ பூங்காவை திறந்து வைத்தார்.

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் இலக்கு நிர்ணயித்துள் ளார், அந்த இலக்கினை எய்துவதற்கான பல்வேறு முன்னெடுப்புகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடனும், மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஐக்கிய அரபு நாடுகள், ஜப்பான், சிங்கப்பூர், ஸ்பெயின், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு, தொழில் நிறுவனங்களுடன் தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய அதீத வளர்ச்சியை கருத்திற்கொண்டு 2000ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் சென்னை தரமணியில் ‘டைடல்’ பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது நம் மாநிலம் முழுவதும் தகவல் தொழில்நுட்பத்துறையில் மாபெரும் வளர்ச்சி ஏற்படவித்திட்டது.

‘பரவலான வளர்ச்சியே பார் போற்றும் வளர்ச்சி, சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி’ என்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது எண்ணத்திற்கேற்ப, தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தும் வகையில், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், விழுப்புரம், தஞ்சாவூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

### பட்டாபிராமில் மாபெரும் டைடல் பூங்கா திறந்து வைத்தல்!

திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராமில் 11.41 ஏக்கர் பரப்பளவில், ரூ. 330 கோடி செலவில் தரை மற்றும் 21 தளங்களுடன் 5.57 லட்சம் சதுரடி பரப்பளவில் அதிநவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மாபெரும் டைடல் பூங்கா முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் (22.11.2024) திறந்து வைக்கப்பட்டது.

இக்கட்டடத்தில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் செயல்பட தேவையான, நவீன தொலைத்தொடர்பு வசதிகள், தடையற்ற உயரழுத்த மும்முனை மின் இணைப்பு மற்றும் மின் இயக்கி வசதிகள், மின்தூக்கி வசதிகள், சுகாதார வசதி, தீ பாதுகாப்பு மற்றும் கட்டட மேலாண்மை வசதிகள், சிசிடிவி கேமரா வசதிகள், 927 கார்கள் மற்றும் 2280 இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி, அரங்கம், 24X7 பாதுகாப்பு வசதிகள், உணவகம் மற்றும் உடற்பயிற்சி கூடம் போன்ற அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டடமானது, 6,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையிலும் பசுமை கட்டடம் வழிமுறைகளின்படியும் கட்டப்பட்டுள்ளது.

பட்டாபிராமில் இப்புதிய டைடல் பூங்கா அமைக்கப்படுவதன் மூலம் தமிழ்நாட்டின் வடபகுதியைச் சார்ந்த குறிப்பாக திருவள்ளூர் உள்ளிட்ட சுற்றுவட்டார மாவட்டங்களில் உள்ள படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன் அம்மாவட்டங்களின் சமூக பொருளாதார நிலையும் மேம்படும்.

பட்டாபிராம் டைடல் பூங்கா திறப்பு விழாவின்போது, M/s. Webberax Solutions Pvt. Ltd., M/s. Dotnix Technologies LLP ஆகிய நிறுவனங்களுக்கு அப்பூங்காவில் தள ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன், துரை. சந்திரசேகர், எஸ்.சந்திரன், வி.ஜி. ராஜேந்திரன், அ.கிருஷ்ணசாமி, கே.கணபதி, ஜோசப் சாமுவேல், எஸ்.சுதர்சனம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபுசங்கர், ஆவடி மாநகராட்சி ஆணையர் எஸ்.கந்தசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருமுடிவாக்கத்தில் துல்லிய பொறியியல் - தொழில்நுட்ப மையம்!

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.11.2024) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு முழுவதும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் தென்னிந்தியாவிலேயே முதன்முறையாக காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடி வாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் துல்லிய உற்பத்தி பெருங்குழுமத்தால் முதற்கட்டமாக 18.18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தை திறந்து வைத்தார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் புரிபவர்கள் சர்வதேச தொழில் சந்தையில் போட்டியிட அவர்களின் உற்பத்தி திறன் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும், வளர்ந்து வரும் தொழில் பிரிவிற்குள் நுழைய வழி வகை செய்யவும், தமிழ்நாட்டில் 5 இடங்களில் சுமார் 100 கோடி ரூபாயில் மெகா கிளஸ்டர் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

### துல்லிய உற்பத்தி பெருங்குழுமம், திருமுடிவாக்கம் (Precision Engineering Technology Centre)

அதன்படி, தானியங்கி வாகனங்கள், இயந்திரங்கள், மின் மற்றும் மின்னணு உபகரணங்களில் பயன்படுத்தப்படும் துல்லிய பொறியியல் பாகங்களை உருவாக்கும் மையமாக (Hub) கருதப்படும் சென்னை மண்டலத்தில் உள்ள காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் தொழில்முனைவோர் கூட்டமைப்பினருடன் இணைந்து 47.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 33.33 கோடி ரூபாய் அரசு மானியத்துடன் துல்லிய உற்பத்தி பெருங்குழுமம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டது.

இப்பெருங்குழும திட்டத்தின் முதல் பகுதியாக 18.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 13.33 கோடி ரூபாய் மானியத்துடன் வடிவமைப்பு மையம் (Engineering Design Centre), மறு பொறியியல் பரிசோதனைக் கூடம்

(ReEngineering Lab), சேர்க்கை உற்பத்தி மையம் (Additive Manufacturing Centre), மேம்பட்ட பயிற்சி மையம், காப்புரிமை (Patent) பதிவு வசதி மையம், நவீன பரிசோதனை மையம் (Testing Lab) போன்றவை நிறுவப்பட்டுள்ளன.

சென்னைமற்றும்அதனைசுற்றியுள்ள14க்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழிற்பேட்டை சங்கத்தினரால் இணைந்து உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கு ஊர்தி (Special Purpose Vehicle) மூலம் அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் பொது வசதிகளை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், இளம் தலைமுறை பொறியாளர்கள், கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பயன்படுத்தி பயன் பெறலாம்.

தமிழ்நாடு முழுவதும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்படுத்தி கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த துல்லிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் பொதுவசதிகளை சென்னை மாவட்டத்தில் 25,000க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களும், திருமுடிவாக்கம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 1,000 தொழில் நிறுவனங்களும் பயன்படுத்தி கொள்ளலாம்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் புதிய கண்டுபிடிப்புகளுக்கு பெரிய நிறுவனங்களை சார்ந்து இருக்காமல், இத்திட்டத்தின் உயர் மென்பொருளை (Advanced Software) பயன்படுத்தி வடிவமைப்பதாலும், சேர்க்கை உற்பத்தி தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்துவதாலும், நவீன பரிசோதனை வசதிகளை குறைந்த செலவில் பெறுவதாலும், உலகத்தரம் வாய்ந்த புதிய கண்டுபிடிப்புகளை மிக குறைந்த உற்பத்தி செலவில் எவ்வித மூலதனமும் இன்றி உருவாக்கிட முடியும்.

இத்தகைய சிறப்பம்சங்களை கொண்ட உயர் தொழில்நுட்ப பிரிசிஷன் இன்ஜினியரிங் தொழில்நுட்ப மையத்தை (பொது வசதி மையம்) அரசு மானியத்துடன் உருவாக்கி, அவ்வசதிகளை தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

